

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.8.2025) முகாம் அலுவலகத்தில், விஐடி பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது பேத்தியின் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.8.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான முனைவர் க. பொன்முடி தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 59.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கீழ்க்கட்டளை ஏரியின் உபரிநீர் கால்வாய் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேற்று முன்தினம் (18.8.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை மண்டலம்) சி. பொதுப்பணித் திலகம், மாமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2025) திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், மாணவிகளுக்கு 2025–2026 ஆம் கல்வியாண்டுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்வில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.த.பிரபு சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், இணை மேலாண் இயக்குனர் சி.கு.ராகவன், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



அரூர் மேற்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கொடைக்கானல் நகரம் (நாயுடுபுரம்),
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



முசிறி கிழக்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



வந்தவாசி கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



திருவண்ணாமலை மாநகரம் (வார்டு – 1, 2, 3 பகுதி),
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



டி.என்.பாளையம் வடக்கு ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



செம்பாக்கம் தெற்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.